ஓம்
ஸ்ரீ முருகன் துணை



# ஸ்ரீ முருகன் ஆலயம்

16680 River Road, Richmond BC V6V 1L6
Telephone: 604-231-7649

# வைகாசி விசாக வருடாந்த திருவிழா 2022

## மே 6 வெள்ளிக்கிழமை முதல் மே 15 ஞாயிற்றுக்கிழமை வரை

மே 6 வெள்ளிக்கிழமை காலை 8:30 மணிக்கு கணபதி ஹோமத்தை தொடர்ந்து அபிஷேகமும் காலை பூஜையும் கொடியேற்றமும் நடைபெறும்.

மே 6 வெள்ளிக்கிழமை மாலை 6:30 மணிக்கு ஹோமமும் தொடர்ந்து அபிஷேகமும் நடைபெறும். அன்று 8:00 மணிக்கு அலங்கார பூஜையும் சுவாமி வீதிவலமும் நடைபெறும்.

ஏனைய திருவிழா நாட்களில் மாலை 5:15 மணிக்கு ஹோமமும் தொடர்ந்து அபிஷேகமும் நடைபெறும். மாலை 7:00 மணிக்கு அலங்கார பூஜையும் சுவாமி வீதிவலமும் நடைபெறும்.

மே 13 வெள்ளிக்கிழமை சப்பரத்திருவிழாவும் மே 14 சனிக்கிழமை தேர் திருவிழாவும் நடைபெறும்.

மே 15 ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாக பூரணை நாளன்று 3:00 மணிக்கு ஹோமமும் தொடர்ந்து தீர்த்த அபிஷேகமும் நடைபெறும். மாலை 5:00 மணிக்கு அலங்கார பூஜையும் சுவாமி வீதிவலமும் நடைபெறும். இதன் பின் கொடி இறக்கம் நடைபெற்று திருவிழா நிறைவு பெறும்.

மே 15 ஞாயிற்றுக்கிழமை பூரண சந்திர கிரகணம் நடப்பதற்கு முன்னதாக இத் திருவிழா நிறைவு பெறும்.

மே 20 வெள்ளிக்கிழமை மாலை வைரவர் மடை நடைபெறும்.

மே 14 சனிக்கிழமை காலை 10:00 மணி பூஜையை தொடர்ந்து அடியார்கள் காவடி எடுக்கலாம். காவடி எடுக்க விரும்புவோர் முன்னதாக ஆலயத்துடன் தொடர்ப்பு கொண்டு உங்கள் பெயர்களை பதிவு செய்து காவடி எடுப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளவும்.

இத் திருவிழாவை சங்கர் ஐயர் என்று அழைக்கப்படும் முன்னால் கொழும்பு பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில் குருக்களும் தற்போது ரிச்மன்ட் ஸ்ரீ முருகன் ஆலய பிரதான குருக்களுமாகிய சிவஸ்ரீ சண்முகரட்ணக் குருக்கள் தலைமை தாங்கி நடத்தி வைப்பார். மேலும், சிலாபம் முன்னேசுவரத்தை பிரப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ண சர்மா அவர்கள் வருகை தந்து இத் திருவிழாவை சிறப்பிப்பார்.

அடியார்கள் திருவிழா நாட்களில் பூக்களையும், பழங்களையும் ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யலாம்.